# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/9 - 2018 ජනවාරි මස 15 වැනි සඳුදා - 2018.01.15

*2054/9 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 24/1951* (xiv)

**மோட்டார் வாகனச் சட்டம் (203 ஆம் அத்தியாயம்)**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 215அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள்
அமைச்சர்.

கொழும்பு 01,
2018, சனவரி 15.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, உடனடியான குற்றப்பண ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் நிரல் II இலுள்ள இயைபான ஏற்பாடுகள் தொடர்பாக நிரல் I இல் தரப்பட்டுள்ள தவறொன்று தொடர்பில் பொலிசு அலுவலரொருவர் கண்டுபிடிப்பொன்றைச் செய்யுமிடத்தும், சம்பந்தப்பட்டுள்ள ஆள் அத்தகைய தவறுக்கான பொறுப்பை ஒப்புக்கொள்ளுமிடத்தும், அத்தகைய ஆள், அத்தகைய தவறுக்கான குற்றவழக்குக்குப் பதிலாக, சட்டத்தின் இயைபான பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், பின்வரும் அட்டவணையின் நேரொத்த நிரல் III இல் தரப்பட்டுள்ளவாறாக உடனடியான குற்றப்பணத்தைச் செலுத்தலாம்.


1A - PG 3887 — 507 (2018/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

(பிரிவு 215அ)

| | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| | சட்டத்தின் பிரிவு | ஏற்பாடு | உடனடியான குற்றப்பணத்தொகை ரூ. ச. |
| 1. | பிரிவுகள் 21, 22, 23, 24, 24அ | - அடையாளங்காணல் தகடுகள் | 1,000.00 |
| 2. | பிரிவு 38 | - மோட்டார் வாகனங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட்டு, தேவைப்படுத்தப்படும்போது காண்பிக்கப்படவேண்டிய அரசிறை உரிமம் | 1,000.00 |
| 3. | பிரிவு 45 | - அரசிறை உரிமங்களுக்கு முரணாக மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துதல் மீதான தடை | 1,000.00 |
| 4. | பிரிவு 128அ | - அவசரகாலச்சேவை வாகனங்களையும் பொதுச்சேவை வாகனங்களையும் ஓட்டுவதற்கான அதிகாரவளிப்பைப் பெற்றுக்கொள்ளத் தவறுதல் | 1,000.00 |
| 5. | பிரிவு 128ஆ | - உரிமம் பெற்றுக்கொள்ளாமல் விசேட நோக்க வாகன மொன்றை ஓட்டுதல் | 1,000.00 |
| 6. | பிரிவு 128இ | - இரசாயனப் பொருட்கள், ஆபத்தான கழிவுகள் முதலிய வற்றுடன் சுமை ஏற்றப்பட்ட வாகனமொன்றை ஓட்டுவதற் கான அதிகாரவளிப்பு பெற்றுக்கொள்ளத் தவறுதல் | 1,000.00 |
| 7. | பிரிவு 130 | - குறிப்பிட்டவொரு வகுப்பினவான வாகனங்களை ஓட்டுவதற் கான உரிமத்தைக் கொண்டிருக்கத் தவறுதல் | 1,000.00 |
| 8. | பிரிவு 135 | - ஓட்டும்போது சாரதி உரிமத்தைக் கொண்டு செல்லத் தவறுதல் | 1,000.00 |
| 9. | பிரிவு 139அ | - அறிவுறுத்தல் உரிமமின்றி அறிவுறுத்துதல் | 2,000.00 |
| 10. | பிரிவுகள் 140 மற்றும் 141 | - வேக எல்லை ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | 3,000.00 |
| 11. | பிரிவு 148 | - வீதி விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல் | 2,000.00 |
| 12. | பிரிவு 152 | - ஓட்டும்போது வாகனத்தின் தடையில்லாக் கட்டுப்பாடு | 1,000.00 |
| 13. | பிரிவு 153 | - ஓட்டும்போது தோதற்ற சைகைகளைப் பயன்படுத்துதல் முதலியன | 1,000.00 |
| 14. | பிரிவு 154 | - வீதியொன்றில் நீண்ட தூரத்துக்கு ஒரு மோட்டார் வாகனத் தைப் பின்செலுத்துதலைத் தடைசெய்தல் | 1,000.00 |
| 15. | பிரிவு 155 | - எச்சரிக்கைக் கருவிகளின் முறையற்ற பாவனை | 1,000.00 |
| 16. | பிரிவு 155அ | - புகை முதலியவற்றின் மிதமிஞ்சிய வெளியேற்றுகை | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *சட்டத்தின் பிரிவு* | *ஏற்பாடு* | *உடனடியான குற்றப்பணத்தொகை ரூ. ச.* |
| *17.* | *பிரிவு 156* | - மோட்டார் வாகனங்களின் மிதிபலகைகள் முதலியவற்றில் சவாரிசெய்தல் அல்லது சவாரிசெய்ய அனுமதித்தலைத் தடை செய்தல் | 500.00 |
| *18.* | *பிரிவு 157* | - மோட்டார் கார்களின் முற்புற ஆசனங்களிலுள்ள ஆட்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் | 1,000.00 |
| *19.* | *பிரிவு 157அ* | - ஆசனப்பட்டிகளைப் பயன்படுத்தாமை | 1,000.00 |
| *20.* | *பிரிவு 158* | - ஓட்டும்போது பாதுகாப்புத் தலைக்கவசங்களை அணியத் தவறுதல் | 1,000.00 |
| *21.* | *பிரிவு 159* | - ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்திலிருந்து விளம்பரங்களை விநியோகித்தலைத் தடை செய்தல் | 1,000.00 |
| *22.* | *பிரிவு 160* | - ஒரு வாகனத்திலிருந்து மிதமிஞ்சிய சத்தம் | 1,000.00 |
| *23.* | *பிரிவு 162* | - பொலிசு அலுவலர்கள் முதலியவர்களின் பணிப்புகளுக்கும் சைகைகளுக்கும் கீழ்ப்படியத் தவறுதல் | 2,000.00 |
| *24.* | *பிரிவு 164* | - வாகனச் சைகைகளுக்கு இணங்கியொழுகாமை | 1,000.00 |
| *25.* | *பிரிவு 165* | - தாங்கியினுள் எரிபொருள் நிரப்பும்போது முற்காப்புகளை எடுக்கத் தவறுதல் | 1,000.00 |
| *26.* | *பிரிவு 166* | - மோட்டார் வாகனங்களை வீதியில் நிறுத்தாமை அல்லது தரித்து வைக்காமை | 1,000.00 |
| *27.* | *பிரிவு 167* | - மோட்டார் வாகனம் வீதியில் நிறுத்தப்படும்போது அல்லது கவனிப்பாரற்று விட்டுவிடப்படும்போது அல்லது பழுதடைந்துள்ளபோது எடுக்கப்படவேண்டிய முற்காப்புகள் | 2,000.00 |
| *28.* | *பிரிவு 178* | - தனியார் கோச்சுக்களில் அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு விஞ்சுதலாக ஆட்களையும், மோட்டார் கார்களில் அல்லது தனியார் கோச்சுக்களில் சொந்தப் பயணப்பொதி தவிர்ந்த பண்டங்களையும் ஏற்றிச்செல்லுதல் | 500.00 |
| *29.* | *பிரிவு 179* | - அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு விஞ்சுதலான ஆட்களை அல்லது பயணிகளை மற்றும் சொந்தப் பயணப் பொதி தவிர்ந்த பண்டங்களை வசுவண்டிகளில் ஏற்றிச் செல்லுதல் | 500.00 |
| *30.* | *பிரிவு 188* | - அதிகபட்ச சுமைக்கு அல்லது அதிகபட்ச அச்சுச் சுமைக்கு விஞ்சுதலான பண்டங்களை லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் ஏற்றிச்செல்லுதல் | 500.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *சட்டத்தின் பிரிவு* | *ஏற்பாடு* | *உடனடியான குற்றப்பணத்தொகை ரூ. ச.* |
| *31.* | *பிரிவு 189* | - ஒரு லொறியில் ஏற்றிச்செல்லப்படும் ஆட்களின் எண்ணிக் கையை விஞ்சாதிருத்தல் | *500.00* |
| *32.* | *பிரிவு 190* | - ஒழுங்குவிதிகளை மீறுதல் | *1,000.00* |
| *33.* | *பிரிவு 196* | - வாகனத்தில் வெளியேற்றுகைச் சான்றிதழை அல்லது தகுதிச் சான்றிதழைக் கொண்டு செல்வதற்குத் தவறுதல் | *500.00* |

*3.* இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டின் *18* ஆம் இலக்க, மோட்டார் வாகனத் (திருத்தச்) சட்டத்தின் *22* ஆம் பிரிவினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணங்கள், இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியன்று நீக்கப்படுதல் வேண்டும்.

*02-33*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.